. 4 பக்கங்கள் . விலை ரூ. 5





# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்

DHINA TAMIL

RNI No : TNTAM/2023/85936





www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 30.03.2026 • மலர் 04 • இதழ்: 88 • Edition : Nagercoil • 30.03.2026 • Vol : 04 • Issue : 88 • Page : 4 • Rs. 5/-

### பெரம்பூர், திருச்சி கிழக்கு தொகுதிகளில்

# திமுக எம்.எல்.ஏ.க்களுக்கு எதிராக விஜய் போட்டி

சென்னை, மார்ச். 30

எதிர்வரும் சட்டப்பேரவைத் தேர்தலில் பெரம்பூர் மற்றும் திருச்சி கிழக்கு என இரண்டு தொகுதிகளில் தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய் போட்டியிடுவதாக அறிவித்துள்ளார். இந்த இரண்டு தொகுதிகளிலும் திமுக எம்.எல்.ஏக்களுக்கு எதிராக அவர் போட்டியிடுகிறார்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு திமுக கூட்டணி, அதிமுக கூட்டணி, நாம் தமிழர் கட்சி உள்ளிட்ட அரசியல் கட்சிகள் தங்கள் வேட்பாளர்களை அறிவித்துள்ளன. சில கட்சிகள் தங்கள் வேட்பாளர்களை அறிவிக்க வேண்டி உள்ளது. இந்நிலையில், இன்று (மார்ச் 29) சென்னையில் உள்ள தனியார் நட்சத்திர விடுதியில் தவெக சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை விஜய் அறிவித்தார்.

இந்த அறிவிப்பில் முதல் இரண்டு தொகுதிகளாக பெரம்பூர் மற்றும் திருச்சி கிழக்கு தொகுதிகள் அறிவிக்கப்பட்டன. இந்த இரண்டு தொகுதிகளிலும் விஜய் போட்டியிடுவதாக அறிவித்துள்ளார். திங்கட்கிழமை முதல் தனது தேர்தல் பிரச்சாரத்தை அவர் தொடங்க உள்ளார். தமிழக அரசியல் களத்தில் தவெக மற்றும் திமுக இடையேதான் போட்டி என தனது அரசியல் மேடை பேச்சுகளில் விஜய் தொடர்ந்து தெரிவித்து வருகிறார். அதை வெளிப்படுத்தும் விதமாக தான் போட்டியிடும் இரண்டு தொகுதிகளிலும் திமுக எம்.எல்.ஏக்களுக்கு எதிராக விஜய் போட்டியிடுகிறார்.



பெரம்பூர் தொகுதி: வடசென்னை மக்களவை தொகுதியில் அமைந்துள்ளது பெரம்பூர் சட்டப்பேரவைத் தொகுதி. கடந்த 2021 தேர்தலில் திமுக சார்பில் போட்டியிட்ட ஆர். டி.சேகர் 1.05 லட்சம் வாக்குகளை பெற்று, ஐம்பது ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றிருந்தார். இந்த முறை மீண்டும் தேர்தலில் போட்டியிட அவருக்கு திமுக வாய்ப்பு வழங்கி உள்ளது.

2019 இடைத்தேர்தலிலும் திமுக சார்பில் போட்டியிட்டு ஆர். டி.சேகர் வெற்றி பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது. இந்த தொகுதியில் திமுக மற்றும் மார்க்சிஸ்ட் கட்சிகள் பல்வேறு தேர்தல்களில் வெற்றி பெற்றுள்ளன. அதிமுக இரண்டு முறை வெற்றி பெற்றுள்ளது.

திருச்சி கிழக்கு: திருச்சி மக்களவை தொகுதிக்கு உட்பட்ட சட்டப்பேரவைத் தொகுதிகளில் ஒன்றாக திருச்சி கிழக்கு தொகுதி அமைந்துள்ளது.

2021 தேர்தலில் திமுக சார்பில் போட்டியிட்ட இனிகோ இருதயராஜ், 94,302 வாக்குகளை பெற்று வெற்றி பெற்றார். சிட்டிங் எம்.எல்.ஏவான அவருக்கே மீண்டும் போட்டியிட வாய்ப்பு வழங்கி உள்ளது திமுக. 2016 மற்றும் 2011 தேர்தல்களில் அதிமுக இந்த தொகுதியில் வெற்றி பெற்றது.

## திமுக செய்ததாகக் கூறும் அனைத்து ஆலயத் திருப்பணிகளையும் ஆய்வு செய்ய வேண்டும்

### அண்ணாமலை பேச்சு



சென்னை, மார்ச். 30

தமிழக முன்னாள் பாஜக தலைவர் அண்ணாமலை வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் தெரிவித்திருப்பதாவது ;

திருச்சி சமயபுரம் மாரியம்மன் கோவில் சன்னதி முன் மண்டபத்தில் தங்கி இருந்த தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த பக்தர்கள் மீது, நள்ளிரவில் கான்கிரீட் மேற்கூரை இடிந்து விழுந்து ஒரு பெண் உயிரிழந்த செய்தி, மிகவும் அதிர்ச்சியும் வேதனையும் அளிக்கிறது. அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன். காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்கள், விரைவில் குணமடைய இறைவனை பிரார்த்திக்கிறேன்.

கடந்த 2022ஆம் ஆண்டு ஜூலை மாதம்தான், ஆலய கும்பாபிஷேகம் நடைபெற்றிருக்கிறது. கடந்த 2023 ஆம் ஆண்டு, வரிசை வளாக மண்டபங்கள், மற்றும் கடந்த 2024 ஆம் ஆண்டு நவம்பர் மாதம்தான், அமாவாசை மண்டபம் மற்றும், குங்கும கூடம் முதலானவற்றைத் திறந்து வைத்தார் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின். கும்பாபிஷே கம் நடந்து நான்கு ஆண்டுகள் கூட முழுமை பெறவில்லை. இந்த நிலையில், கோவில் மண்டபத்தின் மேற்கூரை இடிந்து விழுவது என்பது, திமுக அரசு, எந்த லட்சணத்தில், ஆலயத் திருப்பணிகளை மேற்கொண்டு வருகிறது என்பதற்கான வெளிப்படையான சான்றாகும்.

பக்தர்களின் காணிக்கை நிதி பல கோடிகளைச் செலவு செய்தோம் என்று கணக்கு காட்டும் திமுக அரசு, உண்மையில்,

பக்தர்களின் உயிரை எத்தனை துச்சமாக நினைத்துக் கொண்டிருக்கிறது என்பதே இதன் மூலம் தெரிய வருகிறது. கடந்த ஐந்து ஆண்டுகளில், இவர்கள் செய்ததாகக் கூறும் அனைத்து ஆலயத் திருப்பணிகளையும் ஆய்வு செய்ய வேண்டும்.

இந்த துயர சம்பவத்திற்குப் பின்னணியில் உள்ள அனைவரின் மீதும், கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். கோபாலபுரத்திற்கு முறைவாசல் செய்வதே தனது பணி என்று நினைத்துக் கொண்டிருக்கும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு, பக்தர்களின் பாதுகாப்பை உறுதி செய்யத் தவறியதற்கு பொதுமக்களிடம் பதில் சொல்லியே தீர வேண்டும்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## "தேர்தலில் வெற்றியடையணும்னு நெனச்சிருந்தா...

### பிரசாரத்தில் சீமான் பேச்சு



திருவள்ளூர், மார்ச். 30

திருவள்ளூர் மாவட்டத்தில் நடைபெற்ற தேர்தல் பரப்புரையில் பேசிய சீமான், மற்ற அரசியல்வாதிகளைப் போலப் பொய் வாக்குறுதிகளை அளித்து மக்களை ஏமாற்ற விரும்பவில்லை என்று கூறினார்.

அவர் பேசுகையில், "நான் அடுத்த தேர்தலில் வெற்றியடைய வேண்டும் என்று நினைத்திருந்தால், ஒவ்வொருவருக்கும் 50,000 ரூபாய் தருகிறேன் , வீட்டுக்கு ஒரு ஹெலிகாப்டர் தருகிறேன் என்று சொல்லி இருக்கலாம். மற்ற அரசியல்வாதிகளைப் போலப் பொய் வாக்குறுதிகளை அளித்து மக்களை ஏமாற்ற நான் விரும்பவில்லை. ஒரு அரசியல்வாதி எப்போதுமே அடுத்த தேர்தலைப் பற்றித்தான் சிந்திப்பான். ஆனால், ஒரு உண்மையான தலைவன் மட்டுமே அடுத்த தலைமுறையைப் பற்றிச் சிந்திப்பான்" என்று கூறினார்.

தமிழக சட்டசபை தேர்தல் ஏப்ரல் மாதம் 23ந் தேதி நடைபெற உள்ளதை முன்னிட்டு, தி.மு.க., அ.தி.மு.க., நா.த.க. த.வெ.க. உள்பட அனைத்து கட்சிகளும் தங்களுடைய தேர்தல் பணிகளை தீவிரப்படுத்தி வருகின்றனர்.

## செங்கோட்டையன் உள்பட அதிமுகவில் இருந்து தவெகவில் இணைந்து வாய்ப்பு பெற்றவர்கள் யார் யார்?



சென்னை, மார்ச். 30

தவெக வேட்பாளர்கள் பட்டியல் இன்று வெளியிடப்பட்டது. 234 தொகுதிகளுக்கும் வேட்பாளர்களை விஜய் அறிவித்தார். இதில் மாற்று கட்சியினருக்கு பலருக்கும் தேர்தலில் போட்டியிட வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. அதிமுகவில் இருந்து தவெகவில் இணைந்து போட்டியிட வாய்ப்பு பெற்றவர்கள் விவரம் வருமாறு:

செங்கோட்டையன் கோபிசெட்டிபாளையம்

கு.ப கிருஷ்னன் லால்குடி, சத்யபாமா: திருப்பூர் வடக்கு, தனபால் மகன் லோகேஷ் ராசிபுரம், விஎஸ் பாபு: கொளத்தூர், தூசி மோகன்: செய்யாறு, நாங்குநேரி: ரெட்டியார்பட்டி நாராயணன், ஜேசிடி பிரபாகர்: ஆயிரம் விலக்கு, சிடிஆர் நிமல் குமார்: திருப்பரங்குன்றம், சுப்ரமணியன் கந்தர்வகோட்டை, சோழவந்தான்: முன்னாள் எம்.எல்.ஏ கருப்பையா

### கேரள பாரம்பரிய வேட்டி அணிந்து

## மேடையில் தோன்றிய பிரதமர் மோடிக்கு சிறப்பான வரவேற்பு



பாலக்காடு மார்ச். 30

கேரள சட்டசபைக்கான பதவிக்காலம் மே 23ந்தேதியுடன் முடிவடைய உள்ள சூழலில், கேரள சட்டசபைக்கான தேர்தல் பற்றி இந்திய தலைமை தேர்தல் ஆணையம் கடந்த 15ந்தேதி அறிவிப்பு ஒன்றை வெளியிட்டது. இதன்படி, 140 இடங்களை கொண்ட கேரள சட்டசபைக்கான தேர்தல் ஏப்ரல் 9ந்தேதி ஒரே கட்டத்தில் நடத்தி முடிக்கப்படும். இதற்கான வாக்கு எண்ணிக்கை மே 4ந்தேதி நடைபெறும் என தெரிவிக்கப்பட்டது.

இதனை முன்னிட்டு, கட்சிகள் தொகுதி பங்கீடு, வேட்பாளர் தேர்வு உள்ளிட்ட தீவிர அரசியல் பணிகளில் ஈடுபட்டு வருகின்றன. தேர்தலை முன்னிட்டு தேர்தல் நடத்தை விதிகள் அமலுக்கு வந்துள்ளன. இந்த நிலையில், தேசிய ஜனநாயக கூட்டணிக்கு ஆதரவாக பிரசாரத்தில் ஈடுபடுவதற்காக பிரதமர் மோடி கேரளாவுக்கு இன்று வருகை தந்துள்ளார். இதனை முன்னிட்டு அவர் வெளியிட்டு உள்ள எக்ஸ் வலைதள பதிவில், கேரள மக்களில் ஒருவராக, அவர்களிடையே இன்று இருப்பதற்காக ஆவலாக எதிர்பார்த்து இருக்கிறேன். பாலக்காட்டில் இன்று நடைபெறும் அரசியல் பொதுக்கூட்டத்தில் உரையாற்ற உள்ளேன். திருச்சூரில் நடைபெற உள்ள சாலை வாகன பேரணியிலும் பங்கேற்க உள்ளேன்.

கேரளாவில், தேசிய ஜனநாயக கூட்டணிக்கு ஆதரவான மனநிலை உள்ளது. இடது ஜனநாயக முன்னணி மற்றும் ஐக்கிய ஜனநாயக முன்னணியின் திறனற்ற அரசாட்சி போதும் என்ற நிலைக்கு மக்கள் வந்து விட்டனர் என்று அவர் பதிவிட்டு உள்ளார்.

இந்நிலையில், கேரளாவின் பாலக்காட்டுக்கு வருகை தந்த அவருக்கு கட்சியினர் சிறப்பான வரவேற்பு கொடுத்தனர். பிரதமர் மோடி, கேரளாவின் பாரம்பரிய உடையான முண்டு எனப்படும் வேட்டி அணிந்து மேடையில் தோன்றினார். அவருக்கு, சால்வை போர்த்தி, கேரளாவின் சிறப்பு வாய்ந்த பொருட்களை கட்சியினர் அன்பளிப்பாக வழங்கினர். அதனுடன் பிரதமர் மோடி, கேரளாவின் பிரசித்தி பெற்ற செண்டை மேளம் இசைத்து மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார். இதனை தொடர்ந்து அவர் கூட்டத்தில் உரையாற்றி வருகிறார்.




கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் அடுத்த வல்லன்குமாரன்விளை அரசு தொடக்கப்பள்ளி ஆண்டு விழா மிக விமர்சையாக நடைபெற்றது இந்நிகழ்வில் பத்திரிகை துறையில் சிறப்பாக பணியாற்றி வரும் நிருபர் வின்னிங்ஸ் மணிகண்டன் தலைமை ஆசிரியரால் சால்வை அணிவிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்.




தின தமிழ்

**நிருபர்கள் தேவை**

வெற்றிகரமாக தொடர்ந்து 4 ஆண்டுகளாக

தமிழகம் முழுவதும் பிரிண்ட் ஆகி வெளிவந்து கொண்டிருக்கும் தின தமிழ் நாளிதழுக்கு மாவட்ட வாரியாக நிருபர்கள் மற்றும் போட்டோகிராபர்கள் தேவை

**தகுதிகள்**

குற்றவழக்குகள் இருக்கக் கூடாது, முன் அனுபவம், பட்டதாரி, தமிழில் உரையாடுதல், தமிழில் பிழையின்றி எழுதுதல், தகவல் பரிமாற்றத் திறன்

மேற்கண்ட தகுதிகள் பெற்றிருப்பவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம்

99944 66200 – 70102 64701

# தாமரைகுளம் சேகர கஸ்பா ஆலயத்தில் குருத்தோலை பவனி



தென்தாமரைகுளம்.மார்ச்.30

தாமரைகுளம் சேகர கஸ்பா ஆலயத்தில் குருத்தோலை பவனி நடைபெற்றது. இதில் சிறுவர்கள், பெண்கள், பொறுப்பாளர்கள் என 200க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

கிறிஸ்தவர்களின் தவக்காலத்தில் முக்கிய நாளாக கருதப்படும் குருத்தோலை ஞாயிறையொட்டி நேற்று காலை தாமரைகுளம் சி.எஸ்.ஐ சேகர கஸ்பா ஆலயத்தில் குருத்தோலை பவனி நடைபெற்றது. இந்த பவனிக்கு சேகரத்து ஆயர் கிறிஸ்டோபர் தலைமை வகித்தார். செயலாளர் கால்வின் மற்றும் திருப்பணியாளர் தேவராஜ ஆல்வின் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பவனி ஆலய வளாகத்திலிருந்து புப்பட்டு தென்தாமரைகுளம் எல்.எம்.எஸ். மேல்நிலைப்பள்ளி ஜங்ஷன் வழியாக தென்தாமரைகுளம் ஊர் பகுதிகளை சுற்றி மீண்டும் ஆலயத்தை வந்தடைந்தது. பவனியில் பொறுப்பாளர்கள் பெனி ஜோசப், அருள் ஞானபெல், அருள், அனிதா, பால்சந்திர போஸ், கிறிஸ்டோ யாபேஸ்,ஜெயக்குமார், கிளைச்சங்க பொறுப்பாளர்கள், சிறுவர்கள், பெண்கள், வாலிபர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

### வெற்றிவேல் வீரவேல் முழக்கமிட்டு

# விளாத்திகுளம் அதிமுக வேட்பாளரை வரவேற்ற NDA கூட்டணி கட்சியினர்



விளாத்திகுளம் மார்ச் 30

அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி அதிகாரப்பூர்வமாக அறிவித்து, விளாத்திகுளம் சட்டமன்றத் தொகுதி அதிமுக வேட்பாளராக புதுமுகமாக களம் இறங்கிய சத்யா வேட்பாளராக அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து விளாத்திகுளம் NDA கூட்டணி கட்சியினரிடம் அறிமுகமாக விளாத்திகுளம் வந்தார்,

முன்னதாக விளாத்திகுளம் மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்தில் வழிபாடு நடத்தி பின்னர் ஆரவாரத்துடன் விளாத்திகுளம் பேருந்து நிலையம் முன்பு வருகை தந்தார். விளாத்திகுளத்திற்கு வருகை தந்த அதிமுக வேட்பாளர் சத்யாவை NDA கூட்டணி கட்சியினர் பட்டாசுகள் வெடித்து வெற்றிவேல் வீரவேல் என்று முழக்கமிட்டு சால்வை அணிவித்து உற்சாகத்துடன் வரவேற்றனர்.

அதனைத்தொடர்ந்து விளாத்திகுளம் பேருந்து நிலையம் முன்பு உள்ள முன்னாள் முதல்வர் எம்ஜிஆரின் மார்பளவு சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி, அனைத்து கூட்டணி கட்சியினரும் முழு ஒத்துழைப்பு தந்து விளாத்திகுளம் தொகுதியில் இரட்டை இலை சின்னத்தை வெற்றி பெற செய்ய வேண்டும் என்று அதிமுக வேட்பாளர் சத்யா கேட்டுக்கொண்டார்.

இந்நிகழ்வில் அதிமுக நிர்வாகிகள், பாரதிய ஜனதா கட்சி நிர்வாகிகள், அம்மா மக்கள் முன்னேற்றக் கழக கட்சி நிர்வாகிகள் என சுமார் 500க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

# சட்டமன்ற தேர்தலில் திருச்சி கிழக்கில் போட்டியிடும் வேட்பாளர்கள்



திருச்சி, மார்ச். 30

தமிழக வெற்றிக் கழகம் சார்பில் 234 வேட்பாளர்களையும் அக்கட்சியின் தலைவர் விஜய் அறைவித்தார். இதனிடையே திருச்சி கிழக்கில் விஜய் போட்டியிடப்போவதாக அறிவித்துள்ளார். அதேபோல, திமுக சார்பில் திருச்சி கிழக்கில் இனிகோ இருதயராஜ் போட்டியிடுகிறார். மேலும், அதிமுக சார்பில் ராஜசேகரன், நாதக சார்பில் கிருஷ்ணசாமி ஆகியோர் போட்டியிடுகின்றனர்.

# பறக்கை மதுசூதனப் பெருமாள் கோவிலில் தேரோட்டம்

சுசீந்திரம்.மார்.30

தமிழ்நாட்டில் உள்ள பழமையான கோவில்களில் பறக்கை மதுசூதனப்பெருமாள் கோவிலும் ஒன்று இந்த கோவிலில் வருடம் தோறும் பங்குனி மாதம் கொடியேற்றுத்துடன் திருவிழா துவங்கி பத்து நாட்கள் வெகு விமர்சையாக கொண்டாடப்படுவது வழக்கம் அதுபோல இந்த ஆண்டு பங்குனி மாத திருவிழாவிற்காக கடந்த 22 ஆம் தேதி காலை கொடியேற்றுத்துடன் திருவிழா தொடங்கியது தினந்தோறும் அலங்கரிக்கப்பட்ட வாகனத்தில் பெருமாள் அம்பாள் கருடவாகனத்தில்பவனிவரும்நிகழ்ச்சியும் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்று வந்தன ஐந்தாம் திருவிழா அன்று கருடனுக்கு கண் திறந்துபெருமாள்காட்சியளிக்கும்நிகழ்ச்சி நடைபெற்றது இதில் உள்ளூர் மட்டுமின்றி வெளியூர் பக்தர்களும் பெருமளவு கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர் விழாவின் முக்கிய நிகழ்ச்சியான தேரோட்ட நிகழ்ச்சி இன்று காலை 9:30 மணிக்குதுவங்கப்பட உள்ளது இதில் விநாயகர் தேர் சுவாமி தேர் ஆகிய தேர்களில் அலங்கரிக்கப்பட்ட சுவாமிகளை தேரில் அமரச் செய்து ரத வீதியை பக்தர்கள் ஒரு முறை இழுத்துவலம் வரும் தேரோட்ட நிகழ்ச்சி நடைபெறுகிறது தொடர்ந்து இரவு 9 மணிக்கு சப்த வர்ணா நிகழ்ச்சியும் 9.30 மணிக்கு அலங்கரிக்கப்பட்ட வெள்ளி கருட வாகனத்தில் சுவாமி வேட்டைக்கு எழுந்தருளல் நிகழ்ச்சியும் நடைபெறுகிறது 10ம் திருவிழாவான 31ஆம் தேதி மாலை 4.30 மணிக்கு வெள்ளி கருட வாகனத்தில் சுவாமி மேளதாளங்கள் முழங்க ஆரட்டுதுறைக்குஎழுந்தருழும்நிகழ்ச்சியும் இரவு 11 மணிக்கு தெப்ப திருவிழாவும் நடைபெறுகிறது இதற்கான ஏற்பாடுகளை கோவில்களின் இணை ஆணையர் ஜான்சி ராணி கோவில் ஊழியர்கள் மதுசூதனப்பெருமாள் பக்தர்கள் இணைந்து செய்து வருகின்றனர்



திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடியில் நாளை முதல் வேட்பு மனு தாக்கல் துவங்குவதால் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சியாமளாதேவி மற்றும் மாவட்ட துணை கண்காணிப்பாளர் மகாலட்சுமி, நகர ஆய்வாளர் ஆனந்தன் ஆகியோர் வாணியம்பாடி தாலுக்கா அலுவலகத்தில் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து நேரில் ஆய்வு செய்தனர்



ஈரோடு அருள்மிகு திண்டல் வேலாயுதசுவாமி திருக்கோயில் நுழைவு பகுதியிலிருந்து மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக வளாகம் வரை ஈரோடு மேற்கு சட்டமன்ற தொகுதியில் சட்ட மன்ற தேர்தலை முன்னிட்டு விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது . அப்போது எனது வாக்கு எனது உரிமை 100 சதவீதம் வாக்களிப்போம் உள்ளிட்ட வாசகங்களுடன் மாடுகள் பூட்டப்பட்ட தேர்தல் அலங்கார மாட்டு வண்டிகளில் தேர்தல் விழிப்புணர்வு பேரணியினை ஈரோடு மாவட்ட ஆட்சியர் கந்தசாமி துவக்கி வைத்து பேரணியில் பங்கேற்று விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.



ஈரோடு கிழக்கு தொகுதியில் அதிமுக வேட்பாளராக பெரியார் நகர் மனோகரன் போட்டியிடுகிறார். இவருக்கு தமிழக மக்கள் முன்னேற்றக்கழக ஈரோடு மாவட்ட தலைவர் செல்வராஜ் சால்வை அணிவித்து பாராட்டு தெரிவித்தார். இதில் செயலாளர் மயில் துரையன் மற்றும் நிர்வாகிகள் முருகன் சீனிவாசன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### தென்தாமரைகுளம் பத்திரகாளி அம்மன் கோயிலில்

# கொடைவிழா நாளை தொடங்குகிறது



தென்தாமரைகுளம்., மார்ச். 30.


தென்தாமரைகுளம் இந்து நாடார் சமுதாய வகை பத்திரகாளி அம்மன் கோவில் கொடைவிழா நாளை செவ்வாய்க்கிழமை 31ம் தேதி தொடங்கி நாளை மறு நாள் 1ம் தேதி வரையும், ஆலடி செங்கிடாகார சுவாமி மற்றும் கட்டையேறும் பெருமாள் சுவாமி கோவில் கொடை விழா 7_ம் தேதி செவ்வாய் கிழமையும் நடைபெறுகிறது. பத்திரகாளியம்மன் கோயில் கொடைவிழாவின் முதல் நாளான நாளை 31ம்தேதி மாலை4மணிக்குகடல்தீர்த்தம்கொண்டு வருதல்,5.30 மணிக்கு பெரியம்மன்கோவிலில் பொங்கல் வைத்து வழிபடுதல்,6 மணிக்கு பத்திரகாளியம்மன் கோயிலில் திருவிளக்குஏற்றுதல், இரவு 7 மணிக்கு நாதஸ்வர இசை, 9.30 மணிக்கு வில்லிசை, 11 மணிக்கு சக்தி விநாயகருக்கு பூஜை, 11.30 மணிக்கு அனந்தசயனருக்கு பூஜை, நள்ளிரவு 12 மணிக்கு பத்திரகாளி அம்மனுக்கு பூஜை,பின்னிரவு 12.30 மணிக்கு உச்சினி மாகாளி அம்மனுக்கு பூஜையும் நடக்கிறது

இரண்டாம் நாளான நாளை மறுநாள் புதன்கிழமை காலை 8.30 மணிக்கு நாதஸ்வர இசை, 9.30 மணிக்கு வில்லிசை,நண்பகல் 12 மணிக்கு அனந்தசயனருக்கு தீபாராதனை,12.30 மணிக்கு சமபந்தி விருந்து, 1மணிக்கு பத்திரகாளி அம்மனுக்குதீபாராதனை,பிற்பகல் 1.30 மணிக்கு உச்சினி மாகாளி அம்மனுக்கு தீபாராதனை, 3 மணிக்கு அம்மன் மஞ்சள்நீராடுதல்,இரவு 7.30மணிக்கு நாதஸ்வரஇசை,9மணிக்குவில்லிசை,நள்ளிரவு 12 மணிக்கு கருங்கிடாகார சுவாமிக்கு தீபாராதனை, 1 மணிக்கு கான்ஷா சுவாமிக்குதீபாராதனை,பின்னிரவு3மணிக்கு மூர்த்திமாட சுவாமிக்கு தீபாராதனை,அதிகாலை 5.30 மணிக்கு பிரசாதம் வழங்குதலுடன் விழா நிறைவு பெறுகிறது. இதேபோல் அடுத்தமாதம் 7ம்தேதி செவ்வாய்கிழமை ஆலடி சிவ செங்கிடாகராசுவாமி மற்றும் கட்டையேறும் பெருமாள் சுவாமி கோயில் கொடைவிழா நடைபெறுகிறது.

விழவன்று மாலை 4 மணிக்கு கடல் தீர்த்தம் கொண்டு வருதல், 6.30 மணிக்கு திருவிளக்கு ஏற்றுதல்,இரவு 7.30 மணிக்கு நாதஸ்வர இசை, 8.30 மணிக்கு வில்லிசை, 9.30 மணிக்கு நாராயணசுவாமிக்கு பூஜை, 10.30 மணிக்கு சிவசெங்கிடாகார சுவாமிக்கு பூஜை, 11மணிக்கு கபாலகாரி அம்மனுக்கு பூஜை, பின்னிரவு 2 மணிக்கு கட்டையேறும் பெருமாள் சுவாமிக்கு பூஜை, 3 மணிக்கு பூக்குழி வழிபாடு,அதிகாலை 5 மணிக்கு தானதர்மங்களுடன் விழா நிறைவு பெறுகிறது. விழா ஏற்பாடுகளை ஊர் பொது மக்கள் மற்றும் ஆலய அறங்காவலர் குழுவினர் செய்து வருகின்றனர்.

### வையம்பட்டி அருகே

# கள்ளச் சந்தையில் மது விற்றவர் கைது



திருச்சி, மார்ச். 30

திருச்சி மாவட்டம், வையம்பட்டி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட கே.புதுகோட்டையைச் சேர்ந்த பழனிவேல் என்பவர் தனது வீட்டில் கள்ளச் சந்தையில் மது விற்பனை செய்வதாகக் கிடைத்த தகவலின் பேரில் போலீசார் சோதனை நடத்தினர். சோதனையின் போது, விற்பனை நோக்கத்திற்காக வைக்கப்பட்டிருந்த 26 மது பாட்டில்களை போலீசார் பறிமுதல் செய்து, பழனிவேலைக் கைது செய்தனர்.

### வீட்டை கையகப்படுத்த சென்ற

# நீதிமன்ற காவலாளி மீது தாக்குதல் கணவன் மனைவி மீது வழக்கு

மார்த்தாண்டம், மார்ச்.30

புதுக்கடை அருகே உள்ள காப்புக்காடு கண்ணன்கரைவிலை பகுதியை சேர்ந்தவர் ரசல்ராஜ் (58) இவர் விவசாயம் செய்து வருகிறார். இவரது மனைவி அனிதா (53) காங்கிரஸ் கட்சியின் முஞ்சிறை ஒன்றிய மகளிர் அணி தலைவராக உள்ளார். இவர்கள் சேர்ந்து கடந்த 2014 ஆம் ஆண்டு நாகர்கோவில் சிட்டி யூனியன் வங்கி கிளையில் இருந்து, ரகுதாஸ் என்பவருக்கும் அவரது மனைவிக்கும் 15 லட்ச ரூபாய் கடன் வாங்கி கொடுத்துள்ளனர்.

இந்த கடனுக்காக ரசல்ராஜ் அவர் மனைவி அனிதா ஆகியோர் தனது வீட்டுடன் கூடிய சொத்து மற்றும் வீட்டினுடைய நிலத்தை அடமானமாக வைத்து, அசல் ஆவணங்களை வங்கியில் ஒப்படைத்து கடன் வாங்கி உள்ளார்கள்.

ஆனால் கடன் வாங்கிய நபர்கள் திரும்ப கடனை அடைக்க வில்லை என்று தெரிகிறது. இதனால் வங்கி நிர்வாகம் சார்பில் நாகர்கோவில் முதன்மை குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் புகார் செய்யப்பட்டது. கடந்த 26 ஆம் தேதி நீதிமன்ற உத்தரவின் பேரில் வீட்டை பூட்டி சீல் வைத்து, வீட்டை கையகப் படுத்தி வங்கி அதிகாரியிடம் ஒப்படைக்க நீதிமன்றம் சார்பில் காவலாளி நியமிக்கப்பட்டு இருந்தார்.

சம்பவ நாளில் சம்பவ இடத்திற்கு வந்த காவலாளியை ரசல் ராஜ் மற்றும் அனிதா ஆகியோர் கொலை விரட்டல் விடுத்து அவரை விரட்டியுள்ளனர். பின்னர் காவலாளியால் பூட்டப்பட்ட விட்டு வீட்டின் பூட்டை உடைத்து அத்துமீறி உள்ளே சென்று வீட்டை கைவசப்படுத்தி உள்ளார்கள்.

இது குறித்து வங்கி கிளை மேலாளர் பாஸ்கர் (46) என்பவர் புதுக்கடை போலீசில் புகார் அளித்தார். புகாரின் பேரில் புதுக்கடை சப்இன்ஸ்பெக்டர் ஜான்ரோஸ் வழக்குப்பதிவு செய்தார்.

### புதுக்கடை அருகே

# பைக்கில் தவெக கட்சி தலைவர் படம் கொடி ஓட்டிய வாலிபர் மீது வழக்கு

புதுக்கடை, மார்ச். 30

புதுக்கடை அருகே உள்ள மேலங்கலம் பகுதியைச் சேர்ந்தவர் ஜெயக்குமார் மகன் விஷால் (19). இவர் தற்போது தேர்தல் விதிமுறைகளை மீறி அவரது இருசக்கர வாகனத்தில் முன்புறமும் பின்புறமும் தமிழக வெற்றி கழக தலைவர் படம் மற்றும் அந்தக் கட்சியின் கொடி சின்னத்தை இருசக்கர வாகனத்தில் ஒட்டி உள்ளார். மேலும் விதிமுறைகளைமீறி பொது வெளியில் சுற்றி திரிந்துள்ளார் இது குறித்த புகாரின் பேரில் புதுக்கடை போலீசார் நேற்று கைசூண்டி சந்திப்பில் வைத்து விஷாலை கைது செய்து, பைக்கை பர்முதல் செய்தனர். தொடர்ந்து அவர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டது.

### புதுக்கடை அருகே


# வாலிபர் மீது அடையாளம் தெரியாத பைக் மோதல்

புதுக்கடை, மார்ச். 30

புதுக்கடை அருகே உள்ள காப்புக்காடு மாராயபுரம் பகுதியை சேர்ந்தவர் சிபி (27).இவர் அந்த பகுதியில் சத்துணவு பணியாளராக பணியாற்றி வருகிறார். இந்த நிலையில் நேற்று முன்தினம் காப்புக்காடு தாழவிளைப் பகுதியில் உள்ள ரேஷன் கடையிலிருந்து ரேஷன் வாங்க வீட்டிலிருந்து பஸ்ஸில் வந்துள்ளார். அவர் ரேஷன் கடை பக்கம் சாலையில் இறங்கி சாலையை கடக்கும் போது, அதி வேகமாக வந்த இருசக்கர வாகனம் ஒன்று சிபியின் மீது மோதி விட்டு நிற்காமல் சென்று விட்டது. இதில் தூக்கி வீசப்பட்ட சிபி படுகாயம் அடைந்தார். உடனடியாக அவரை மார்த்தாண்டத்தில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தனர். இதில் அவருக்கு முதுகெலும்பில் படுகாயம் ஏற்பட்டுள்ளதாக தெரிகிறது. இது குறித்த புகாரின் பேரில் புதுக்கடை போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் ஜான் ரோஸ் வழக்கு பதிவு செய்து, விபத்தை ஏற்படுத்திய பைக் குறித்து விசாரித்து, வருகிறார்.

### சமயபுரத்தில்

# சிமெண்ட் பூச்சு இடிந்து விழுந்து பெண் பக்தர் பலி



திருச்சி, மார்ச். 30

சமயபுரம் மாரியம்மன் கோவிலில் நள்ளிரவில் பக்தர்கள் உறங்கிக் கொண்டிருந்தபோது, மேல் சுவரில் இருந்த சிமெண்ட் பூச்சுகள் பெயர்ந்து விழுந்ததில் தஞ்சாவூரைச் சேர்ந்த நதியா என்ற பெண் பக்தர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். மேலும் இருவர் காயமடைந்தனர். இது குறித்து சமயபுரம் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## திருக்கோவிலூர் தொகுதி

# திமுக வேட்பாளராக பொன்.கௌதமசிகாமணி அறிவிப்பு

## பூக்கடை கணேசன் தலைமையில் பட்டாசு வெடித்து கொண்டாட்டம்



திருவெண்ணெய்நல்லூர்.மார்ச்.30

திருக்கோவிலூர் சட்டமன்ற தொகுதி திமுக வேட்பாளராக முன்னாள் அமைச்சர் பொன்முடி எம்.எல்.ஏ., மகன் விழுப்புரம் தெற்கு மாவட்ட செயலாளர் பொன். கௌதமசிகாமணி அறிவிக்கப்பட்டுள்ளார். இதை அடுத்து திருவெண்ணெய்நல்லூர் கடைவீதியில் திமுக நகர செயலாளர் பூக்கடை கணேசன் தலைமையில் பட்டாசு வெடித்து கொண்டாடப்பட்டது. இதில் திமுக நகர நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு கோஷமிட்டபடி ஊர்வலமாக சென்று உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தனர்.

## கடையால் அருகே

# மாசடைந்த குடிநீர் விநியோகம் மக்கள் முயற்சியால் உடனடி தீர்வு




அருமனை: மார்ச் 30

கன்னியாகுமரி மாவட்டம் கடையால் மேலத்தெரு அருகே மக்களுக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்காமல், ஆற்றுநீரை நேரடியாக குடிநீர் தொட்டியில் தேக்கி பொதுமக்களுக்கு விநியோகித்து வந்தனர்.இதனால் மக்கள் நோய் தொற்றிற்கு ஆளாகும் நிலை ஏற்பட்டது. கடையால் பேரூராட்சி நிர்வாகத்தை கண்டித்து பொதுமக்கள் பேரூராட்சி அலுவலகத்தில் தங்களுக்கு விநியோகிக்கப்படும் நீரோடு திரண்டு வந்தனர்.சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தனர்.

கோரிக்கைகளை கேட்டறிந்த செயல் அலுவலர் மாதத்திற்கு இருமுறை நீர் தேக்க தொட்டியை சுத்தம் செய்து அருகில் இருக்கும் பொதுமக்களிடம் கையெழுத்து பெற வேண்டும் என நடவடிக்கை எடுத்துள்ளார்.

## தமிழக விவசாயிகள் சங்கத்தின் மாநில செயற்குழு கூட்டத்தில்


# விவசாயிகள் பெற்ற கடன் முழுவதையும் தள்ளுபடி செய்யும் கட்சிக்கு ஆதரவளிப்பது என தீர்மானம்



கிருஷ்ணகிரி மார்ச் 30:

கிருஷ்ணகிரி மாவட்டம் பையூரில் தமிழக விவசாய சங்கத்தின் மாநில செயற்குழு கூட்டம் நடைபெற்றது. இச்சங்கத்தின் மாநில தலைவர் வேணுகோபால் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்திற்கு மாநில பொதுச் செயலாளர் உதயகுமார், மாநில துணைச் செயலாளர் கோணப்பன், மாநில துணைத் தலைவர் அரி மூர்த்தி, மாநில துணைத்தலைவர் முருகன், மாநில பொருளாளர் சுபாஷ் , மாநில அமைப்பாளர் ராமதாஸ், மாவட்ட தலைவர் ராஜ், ஆகியோர் முன்னிலை வகித்து கூட்டத்தில் நிறைவேற்றப்பட உள்ள தீர்மானங்கள் குறித்து சிறப்புரை ஆற்றினார்கள். மேலும் இக்கூட்டத்தில் கூட்டுறவு வங்கிகள் மற்றும் தேசிய வங்கிகளில் சிறு குரு விவசாயிகள் உள்ளிட்ட அனைத்து விவசாயிகளும் பெற்ற கடன்களையும் முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டும், விவசாயிகள் மற்றும் விவசாய தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் ரூபாய் 10 ஆயிரம் வழங்கிட வேண்டும், மிளகாய்,மஞ்சள் போன்ற வாசனை மசாலா பொருட்களுக்கான தேசிய ஆணையம் அமைக்கப்பட வேண்டும், தேசிய ஊரக வேலை உறுதித்திட்டதினை முழுமையாக விவசாயத்திற்குபயன்படுத்தப்படவேண்டும், விவசயிகள் மீது வனத்துறையினர்கள் வழக்கு போடுவதை நிறுத்த வேண்டும், காட்டுப் பன்றியை சுட்டு கொல்ல விவசாயிகளுக்கு அனுமதியளிக்க வேண்டும், விவசாயிகள் உற்பத்தி செய்யும் மாங்காய்க்கு உரிய விலை நிர்ணயம் செய்யப்பட வேண்டும், குண்டு மல்லி விவசாயத்தினை பாதுகாக்க செண்ட் தொழிற்சாலை அமைக்க வேண்டும், நெல் கொள்முதல் நிலையம் அமைத்திட வேண்டும் உள்ளிட்ட 15 திர்மானங்களும் நிறைவேற்றப்பட்டது. இதனைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய மாநில தலைவர் வேணுகோபால் வன விலங்குகளால் பாதிக்கப்படும் விவசாயிகளுக்கு உரிய இழப்பீடு வழங்க வேண்டும் அனைத்து பயிர்களுக்கும் குறைந்தபட்சம் ஆதரவு விலையை உத்திரவாப்படுத்தும் சட்டம் இயற்றி எம்.எஸ், சாமிநாதன் கமிஷன் அறிக்கையின் படி பயிர் விலை நிர்ணயம் செய்ய வேண்டும், ஒவ்வெரு தேர்தல்அறிக்கைகளிலும்விவசாயிகள் பெற்ற கடன் தள்ளுபடி என்பது கானல் நீராகவே உள்ளது, ஆகவே இத்த தேர்தலில் கூட்டுறவு வங்கி மற்றும் தேசிய வங்கிகளில் விவசாயிகள் பெற்ற கடன் முழுவதையும் தள்ளுபடி செய்யும் கட்சிக்கு ஆதரவளிப்பது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதாக தெரிவித்தார்,

மேலும் இந்தக்கூட்டத்தில் விவசாய சங்கத்தை சேர்ந்த கிழக்கு மாவட்ட தலைவர் செல்வராஜ், மாவட்ட செயலாளர் சிவகுமார், மாவட்ட துணை செயலாளர் வெங்கட்ராமன், மாவட்ட பொருளாளர் சம்பத், மற்றும் விவசாய சங்கத்தினை சேர்ந்த கோபால், பி,சிராஜ், தமிழரசன், குமார், சிதம்பரம் கவரதராஜ், கோவிந்தம்மாள், ராமமூர்த்தி, ரங்கநாத், குள்ளப்பன், சீனிவாசன், சித்தலிங்கப்பா, பசுவன், அண்ணாமலை, ஜம்புலிஸ்கேஸ்வரன், குமரேசன், நாராயணப்பா, வெங்கட்ராமன், முன்ராஜ், முனியப்பன், மூர்த்தி உள்ளிட்ட தமிழகத்தின் பல்வேறு இடங்களில் இருந்து நிர்வாகிகள் மற்றும் விவசாயிகளும் கலந்துக் கொண்டனர்.



தருமபுரி மாவட்டம் பாப்பிரெட்டிப்பட்டி சட்டமன்ற தொகுதிக்கு திமுக சார்பில் பி. பழனியப்பன் வேட்பாளரக தலைமை கழகம் அறிவித்துள்ளது. இவரது வயது 27/5/1961 (65) , கல்வி தகுதி எம். எஸ். சி. பி., எச். டி., கொங்கு வேளாளர் கவுண்டர் இனத்தை சார்ந்தவர். தந்தையின் பெயர் பெருமாள் கவுண்டர், தாயார் பெயர் பொன்னியம்மாள், மனைவியின் பெயர் ஆர். ரோஜா , மகன் பி.எழில்மறவன், மருமகள் எஸ். கிருத்திகா, மகள் பி. யாழினி, மருமகன் ஏ. விஜய் ஆனந்த், இவர் வகித்த பதவிகள் 1996 2001 வரை ஒன்றிய குழு உறுப்பினர், 1998 2005 வரை ஒன்றிய கழகச் செயலாளர்( அதிமுக), 2001 2006 வரை மொரப்பூர் சட்டமன்ற உறுப்பினர், 2011 2016 வரை உயர் கல்வித்துறை அமைச்சர் (அதிமுக), 2016 2018 வரை பாப்பிரெட்டிப்பட்டி சட்டமன்ற உறுப்பினர், 2022 முதல் தருமபுரி மேற்கு மாவட்ட செயலாளர், இவரது முகவரி மோளையானூர், பாப்பிரெட்டிப்பட்டி (வ), தருமபுரி மாவட்டம்.



தருமபுரி மாவட்டம் அரூர் சட்டமன்ற (தனி) தொகுதிக்கு திமுக சார்பில் அ. சண்முகம் அயலக அணி மாவட்ட துணைத்தலைவர் பொய்யம்பட்டி அரூர் தொகுதிக்கு வேட்பாளராக தலைமை கழகம் அறிவித்துள்ளது. பிறந்த தேதி 30 04 1964 (64), தந்தையின் பெயர் அண்ணாமலை, மனைவி சரளா ,மகன் எஸ். அமீர்தராஜ், ஆதிதிராவிடர் இனத்தைச் சார்ந்தவர். இவர் கட்சியில் வகித்த பதவிகள் 1990 முதல் திமுகவின் உறுப்பினர், கிளை கழகச் செயலாளர், ஒன்றிய பொருளாளர், 2006 முதல் 2011 வரை மற்றும் 2011 முதல் 2016 வரை 10 ஆண்டுகள் தீர்த்தமலை ஊராட்சி மன்ற தலைவர், தற்போது தருமபுரி கிழக்கு மாவட்ட அயலக அணி துணைத் தலைவராக பணியாற்றி வருகிறார்.



தருமபுரி சட்டமன்ற தொகுதிக்கு திமுக கூட்டணி சார்பில் தேமுதிக வேட்பாளராக இளங்கோவன் தலைமை கழகம் அறிவித்துள்ளது. இவரது வயது 76, கல்வி தகுதி எம்.பி.பி.எஸ்., தொழில் மருத்துவர் இந்து பிள்ளை இனத்தைச் சார்ந்தவர். மனைவி மருத்துவர் கலாவள்ளி, மகள் தேவி ஶ்ரீ, மகன் மருத்துவர் மோகனசெந்தில், தருமபுரி மாவட்ட செயலாளர், மாநில அவைத்தலைவர், 2014 ல் தருமபுரி சட்டசபை தொகுதியில் போட்டி, 2009 மற்றும் 2019 லோக்சபா தேர்தலில் போட்டி, தற்போது தருமபுரி தொகுதி வேட்பாளர்.

# திருப்பூர் அதிமுக வடக்கு சட்டமன்ற வேட்பாளர் முதல் ஆலோசனைக் கூட்டம்



திருப்பூர் :மார்ச்30

15.வேலம்பாளையம்வருகிற 2026 சட்டமன்றத் தேர்தலில் திருப்பூர் வடக்கு தொகுதியில் அதிமுக வேட்பாளராக முன்னாள் அமைச்சர் எம்.எஸ்.எம். ஆனந்தனை அதிமுக கட்சி அறிவித்துள்ளது. முன்னாள் எம்எல்ஏ கே என் விஜயகுமார்

அதன்படி வடக்கு தொகுதியில் கட்சி நிர்வாகிகளை சந்தித்து ஆலோசனை நடத்தி வருகின்றனர். சிறு பூலுவபட்டி,சாமுண்டிபுரம், ஆத்துப்பாலம், அனுப்பர்பாளையம், 15வேலம்பாளையம் உள்ளிட்ட பகுதிகளில்பகுதி செயலாளர் தங்கராஜ்,தலைமையில் வேட்பாளருக்கு சிறப்பாக வரவேற்பு அளிக்கப்பட்டது, நிர்வாகிகள் சந்திப்பு கூட்டத்தில் பகுதிச் செயலாளர்கள்வார்டு செயலாளர்கள் மகளிரணி நிர்வாகிகள் கூட்டணி கட்சி நிர்வாகிகள்பெரும்திரளாககலந்து கொண்டனர்..

# திமுக பயத்தில் நடுங்கிக் கொண்டு இருக்கிறது

## பாஜக மாநில செயற்குழு உறுப்பினர் விஜயதரணி பேட்டி



மார்த்தாண்டம், மார்ச்.30

விளவங்கோடு தொகுதிக்குட்பட்ட மேல்புறம் தெற்கு ஒன்றிய பாரதிய ஜனதா அலுவலகம் திறப்பு விழா ஒன்றிய தலைவர் சரவணவாஷ் நாராயணன் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் மேற்கு மாவட்ட தலைவர் ஆர் டி சுரேஷ் ,பொது செயலாளர் நந்தினி, மாநில செயற்குழு உறுப்பினர்கள் ஜெயசீலன், தர்மராஜ், விஜயதரணி ஆகியோர் குத்து விளக்கு ஏற்றி அலுவலக செயல்பாட்டை துவங்கி வைத்தனர். தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த பாஜக மாநில செயற்குழு உறுப்பினர் விஜயதரணி கூறியதாவது:

கேள்வி : திமுக மூன்று அமைச்சர்களுக்கு மீண்டும் வாய்ப்பு வழங்க வில்லை இதை எப்படி பார்க்கிறீர்கள்

பதில் : திமுக பயத்தில் நடுங்கிக் கொண்டு இருக்கிறது என்பதைதான் பார்க்க முடிகிறது.

இன்று அவர்கள் அமைச்சர் பலர் மீதும் பல்வேறு குற்றச்சாட்டுக்கள் நிறைந்து இருக்கும் சூழ்நிலையில் அனைத்து அமைச்சர்களும் குற்றச்சாட்டு க்கு உட்படவர்களாக மாறி இருக்கிறார்கள். மக்களிடம் இருந்து பல குற்றச்சாட்டுக்கள் எழுந்த அமைச்சர்கள் ஆகட்டும் ஊழல் குற்றச்சாட்டுக்கள் எழுந்த அமைச்சர்கள் ஆகட்டும் இது போன்ற பல்வேறு அமைச்சர்களை தேர்தலில் நிறுத்தாமல் இருப்பது நன்மை என்று கருதும் அளவில் திமுக சரிந்து இருக்கிறது என்பது உண்மை. சட்டம் ஒழுங்கு சூழ்நிலை மிக மோசமாக தமிழகத்தில் இருந்து கொண்டு இருந்தது. சிறுவர்கள் சிறுமிகள் பாதிக்கப்பட்ட வழக்குகள் 125 சதவீதமாக உயர்ந்து, பெண்களுக்கு எதிரான குற்றங்கள் 55 சதவீதம் உயர்ந்து இருக்கும் சூழ்நிலையில் ஆளும் கட்சிக்கு எதிரான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

அந்த அளவில் இருந்த அமைச்சர்களை மாற்றம் செய்ய வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்பட்டுள்ளனர்.

கேள்வி : ஜோதிமணி காங்கிரஸ் கட்சி சட்டமன்ற உறுப்பினர்களை காங்கிரஸ் தலைவர்கள் விற்பனை செய்வதாக குற்றச்சாட்டு கூறியுள்ளாரே?

பதில்: காங்கிரஸ் கட்சியில் நடப்பது என்ன என்பது வெளி வந்து கொண்டு இருக்கிறது. இதை நாங்கள் எல்லாம் சொன்ன நேரத்தில் நம்பாத காங்கிரஸ் கட்சியினர் இப்போதாவது நம்பட்டும். அங்கு நடப்பதை பாராளுமன்ற உறுப்பினரே வெளிப்படுத்தி இருக்கிறார். இந்த அளவுக்கு விற்பனை பொருளாக காங்கிரஸ் கட்சி மாறி விட்டது.

கேள்வி :திமுக வேட்பாளர் பட்டியல் வெளியிட்டுள்ளனர். அதன் அடிப்படையில் எந்த அளவுக்கு தேசிய ஜனநாயகக் கூட்டணி வெற்றி பெறும்? எந்த அளவிற்கு ஈடு கொடுக்க முடியும் என்று நினைக்கிறீர்கள்?

பதில்: தேசிய ஜனநாயகக் கூட்டணி க்கு வெற்றி நிச்சயம் என்பது உறுதி செய்யப்பட்ட ஒன்றாக மாறியிருக்கிறது. தற்போது திமுக வெளியிட்டு உள்ள பட்டியல் தெள்ள தெளிவாக எதை கூறுகிறது என்றால் தேசிய ஜனநாயகக் கூட்டணியில் அதிமுக, பாமக, அமமுக, அனைத்து கட்சி இணைந்து போட்டியிடும் வேட்பாளர்கள் நிச்சயமாக வெற்றி பெற போகிறார்கள் என்று சமிக்கையை அளித்து இருக்கிறது. உறுதி செய்யப்பட வெற்றியாக மாறி இருக்கிறது தேசிய ஜனநாயகக்கூட்டணி வெற்றி.

கேள்வி : விஜய் தேர்தல் பிரச்சாரத்திற்கு அனுமதி கொடுக்க வேண்டும் என்று சீமான் பேசி இருக்கிறாரே?

பதில்: தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபடுவார்கள் யாராக இருந்தாலும் அவர்கள் கோரிக்கை வைக்கும் பட்சத்தில் அவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்ட கூடாது என்பது எங்களின் கருத்துமாக இருக்கிறது. சரியான மனு கொடுத்து இருக்குமேயானால் எல்லோரும் அனுமதி கொடுப்பது போல அவருக்கும் அனுமதி கொடுப்பது நியாயமாக இருக்கும். தேர்தல் பிரச்சாரத்தில் இருந்தும், பரப்புரையில் இருந்தும் யாரையும் ஒதுக்கி வைப்பது ஜனநாயகம் அற்ற செயலாக பார்க்கப்படும். என பேட்டியில் கூறினார்.

# திருச்சி கிழக்கு தொகுதியில் விஜய் போட்டி

## பட்டாசு வெடித்து கொண்டாடிய தொண்டர்கள்



திருச்சி, மார்ச். 30

தமிழகசட்டமன்றதேர்தல்2026ஏப்.23ம் தேதி நடைபெறவுள்ளது. அனைத்துக்கட்சி சார்பிலும்வேட்பாளர்கள்அறிவிக்கப்பட்டு அரசியல் களம் சூடுபிடித்துள்ளது.

இந்தநிலையில் விஜயின் தவெகவின் வேட்பாளர்பட்டியல்இன்றுவெளியானது. அதன்படி தவெக கட்சியின் தலைவர் விஜய் பெரம்பூர் மற்றும் திருச்சி கிழக்கு ஆகிய இரண்டு தொகுதிகளில் போட்டயிடுகிறார்.

ஏற்கனவே பெரம்பூர் தொகுதி என்று தெரிந்த நிலையில் திருச்சி கிழக்கு தொகுதியிலும் போட்டியிடுவது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

திருச்சி கிழக்கு ஆகிய இரு தொகுதிகளில் போட்டியிடவுள்ளார். இந்நிலையில், திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த தொண்டர்கள் பட்டாசு வெடித்து கொண்டாடி வருகின்றனர்.



தருமபுரி மாவட்டம் பாலக்கோடு சட்டமன்ற தொகுதிக்கு திமுக சார்பில் டாக்டர் டி. என். வி. செந்தில் குமார் தலைமை கழகம் அறிவித்துள்ளது. இவரது வயது 22 06 1977 (49), தந்தை டி .என். வி. செல்வராஜ், தாயார் ஷீலா, மனைவி ஷோபனா ,மகன் ஷ்விதன், மகள் ஷ்வினிதா, முகவரி தருமபுரி டவுன் சின்னசாமி தெரு, தொழில் ஸ்கேன் சென்டர், 2016 முதல் தருமபுரி மாவட்ட திமுகவில் கட்சிப்பணி, 2019 ல் தருமபுரி லோக்சபா தொகுதி எம்பி, தற்போது மாநில அயலக அணி இணைச் செயலாளராக இருந்து வருகிறார்.

### தென்தாமரைகுளம் அருகே

## பணம் வைத்து சூதாடிய 4 பேர் கைது

தென்தாமரைகுளம், மார்ச் 30:

தென்தாமரைகுளம் எஸ்ஐ பிரைட் பிளஸ்ஸிங் தலைமையிலான போலீசார் சரவணன் தேரி குளக்கரை பகுதியில் ரோந்து சென்றனர். அப்போது, அங்கு சூதாடிய ஒரு கும்பல் இவர்களை கண்டதும் எழும்பி ஓடியுள்ளனர். போலீசார் விரட்டி சென்று, சுண் டன்பரப்பு பகுதியை சேர்ந்த சுயம்புலிங்கம் (55),சரவணன் தேரியை சேர்ந்த சுரேஷ். ( 38), லிங்கேஸ்வரன்.( 46) மற்றும் காமராஜர் நகர் பகுதியை சேர்ந்த வேல்முருகன். ( 56)) என 4 பேரை மடக்கி பிடித்தனர். பின்னர் அவர்களை கைது செய்து, அவர்க ளிடமிருந்த 2 ஆயிரம் ரூபாயையும், சீட்டு கட்டையும் பறிமுதல் செய்தனர்.

### துறையூர் அருகே

## கிணற்றில் மூழ்கி உயிரிழந்த 14 வயது சிறுவன்



திருச்சி, மார்ச். 30

துறையூர் அருகே எஸ்.என். புதூர் கிராமத்தில் 14 வயது தன்ஷிக் நேற்று நண்பர்களுடன் கிணற்றில் குளிக்கச் சென்றபோது நீச்சல் தெரியாமல் நீரில் மூழ்கி உயிரிழந்ததாகக் கூறப்படுகிறது. தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு வந்த தீயணைப்புத் துறையினர் பல மணி நேர போராட்டத்திற்குப் பிறகு தன்ஷிக்கின் உடலை மீட்டனர். பின்னர், உடலை காவல்துறையிடம் ஒப்படைத்தனர்.

### கன்னியாகுமரி அருகே

## பள்ளி மாணவர்குளத்தில் மூழ்கி உயிரிழப்பு

கன்னியாகுமரி,மார்ச்.30

கன்னியாகுமரியை அடுத்து உள்ள கோவளம் பகுதியில் வசிப்பவர் ஜெயராம். இவரது மகன் ஜோயல் (வயது 14). இவர் அந்த பகுதியில் உள்ள ஒரு பள்ளியில் 9 ஆம் வகுப்பு படித்து வந்தார்.

இவர் நேற்று முன்தினம் மாலை கோவளம் பகுதியில் உள்ள தெப்பக்குளத்தில் தனது நண்பர்களுடன் குளிக்க சென்றுள்ளார். குளத்தில் குளித்து கொண்டிருக்கும் போது ஆழமான பகுதிக்கு சென்றுள்ளார். அப்போது நீரில் மூழ்கியுள்ளார். நீச்சல் தெரியாத காரணத்தால் வெளியே வர முடியாமல் பரிதாபமாக உயிரிழந்தார். இதுகுறித்து கன்னியாகுமரி காவல் நிலையத்தில் புகார் செய்யப்பட்டது. அதன்பேரில் போலீசார் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று உடலை கைப்பற்றி, பிரேத பரிசோதனைக்காக ஆசாரிபள்ளம் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு அவரது உடல் பிரேத பரிசோதனை செய்யப் பட்டது. இதுகுறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள். இச்சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

### தஞ்சாவூர்

## கரந்தை தமிழ் வேள் உமா மகேசுவரனார் கலை கல்லூரியில் பட்டமளிப்பு விழா



தஞ்சாவூர். மார்ச்.30

தஞ்சாவூர் அடுத்துள்ள கரந்தை தமிழ் வேள் உமா மகேசு வரனார் கலை கல்லூரி, மற்றும் உமாமகேசுவரனார் கல்வியியல் கல்லூரி பட்டமளிப்பு விழாவும் சிறப்பாக நடைபெற்றது. விழாவிற்கு கல்லூரி செயலாளர் சுந்தர வதனம் தலைமை தாங்கினார்.கல்லூரி முதல்வர் ராஜாமணி அனைவரையும் வரவேற்றார்

தஞ்சாவூர் மண்டல கல்லூரி கல்வி இணை இயக்குனர் குணசேகரன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு 466 இளநிலை மாணவர் களுக்கும், 134 முதுநிலை மாணவர்களு க்கும், 119 கல்வியிய ல் கல்லூரி மாணவர் களுக்கும் பட்டங்க ளை வழங்கி சிறப்பு ரையாற்றினார்.

பாரதிதாசன் பல்கலைக்கழக அள வில் தரவரிசை பட்டி யலில் தமிழ் துறை இளங்கலை மாண விகள் சுபர்ணா 3வது இடமும், ப்ரித்தி 5வது இடமும், ராதா 9வது இடமும் பெற்று கல்லூரிக்கு பெரு மை சேர்த்துள்ள அவர்களுக்கு சிறப்பு விருந்தினர் பதக்கம் அணிவித்து பட்டங் களை வழங்கினார். நிறைவாக உமா மகேசுவரனார் கல்வியியல் கல்லூ ரி முதல்வர் இளவரச ன் நன்றி கூறினார் விழா நிகழ்ச்சிகளை தமிழ்த்துறை உதவி பேராசிரியர் கிருத்தி கா தொகுத்து வழங் கினார்.

## 100 சதவீதம் வாக்களிப்பதன் அவசியம் குறித்து கலை நிகழ்சசிகள் மூலம் பொதுமக்க ளிடம் விழிப்புணர்வு



தஞ்சாவூர் மார்ச் 30

தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள 589 ஊராட்சிகளிலும் 16,725 மகளிர் சுய உதவி குழுக்களையும் சேர்ந்த 1 லட்ச த்து 80 ஆயிரத்து 760 உறுப்பினர்கள் பங்கேற்ற நேர்மையாக வாக்களிப்போம் என தீர்மானம் நிறைவேற்றினர். மேலும் எங்கள் குடும்பத்தில் உள்ள அனைவரும் வாக்க ளிக்க சொல்வதை உறுதிப்படுத்துவோம் பணம், பொருள் மற்றும் எந்த உந்து தலுக்கும் ஈடாகாமல் நேர்மையான முறை யில் எங்களது வாக் குகளை செலுத்து வோம். மாற்றுத் திறனாளிகள், முதி யவர்கள், கர்ப்பிணிகள் வாக்களிக்க வசதியாக வாக்குச்சாவடிக்கு செல்வத ற்கு நாங்கள் துணை புரிவோம் என்பன போன்ற தீர்மானங்களும் நிறைவேற்ற ப்பட்டன. தஞ்சாவூர் அடுத்து ள்ள மானோஜிப்பட்டியில் மகளிர் சுய உதவி குழுவினர் கலந்து கொண்டு தங்களது ஊராட்சியில் 100 சதவீதம் நேர்மையாக வாக்களிப்போம்எனதீர்மானம்நிறைவேற்றப்பட்ட

நிகழ்ச்சியில் மாவட்ட தேர்தல் அலுவலரும், கலெக் டருமான பிரியங்கா பங்கஜம் பங்கேற்றா ர் .அந்த நிகழ்ச்சியில் வாக்களிப்பதின் அவசியம் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகை யில் மகளிர் சுய உதவி குழுவினர் பங்கேற்ற கோலாட் டம், கும்மியாட்டம் ஆகியவற்றை பார்வையிட்டதுடன் கிராமிய பாடல்கள் மூலமாக பொதுமக்க ளிடம் எடுத்துரைக்க ப்பட்டதையும் பார்வையிட்டார். இதில் மகளிர் திட்ட இயக்குனர் அருள் மொழி மற்றும் பலர் கலந்து கொண்டனர்



திருப்பூரில் போலீஸ் பொதுமக்கள் விழிப்புணர்வு சங்கம் இரண்டாம் ஆண்டு துவக்க விழா நேற்று திருப்பூர் மாவட்டம் அவினாசியில் உள்ள தனியார் பார்ட்டி ஹாலில் வைத்து சிறப்பாக நடைபெற்றது. சிறப்பாக நடைபெற்ற இவ்விழாவில் அனைத்து மாவட்ட நிர்வாகிகள் மகளிர் அணி, இளைஞர் அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர். மேலும் நடைபெற்ற இரண்டாம் ஆண்டு துவக்க விழா நிகழ்வில் போலீஸ் பொதுமக்கள் விழிப்புணர்வு சங்கத்தின் செயல்பாடுகள் குறித்தும் மேற்கொண்டு செயல்படுத்த வேண்டிய திட்டங்கள் குறித்தும் விரிவாக விவாதிக்கப்பட்டது. கடந்த இரண்டு ஆண்டுகளாக சங்க வளர்ச்சிக்காக ஆக்கபூர்வமாக செயல்பட்ட நிர்வாகிகள் கௌரவிக்கப்பட்டனர். இறுதியாக வந்தவர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவிக்கப்பட்டு சங்க ஆண்டு விழா நிகழ்ச்சி இனிதே நிறைவு பெற்றது.

### தஞ்சாவூர் மாவட்டத்தில்

## 8 இடங்களில் 12,430 வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்கு பயிற்சி வகுப்பு



தஞ்சாவூர் மார்ச் 30

தஞ்சாவூர் மாவட்டத் தில் 8 இடங்களில் 12,430 வாக்குச்சாவடி நிலை அலுவலர்களு க்கு பயிற்சி வகுப்பு நடந்தது. .தமிழகத்தில் அடுத்த மாதம் ஏப்ரல் 23ஆம் தேதிசட்டச பை தேர்தல் நடக்கி றது. தஞ்சாவூர் மாவ ட்டத்தில் 8 சட்டசபை தொகுதிகள் உள்ள ன திருடைமருதூர் சட்ட சபை தொகுதி யில் 1,356 பேரும், கும்பகோணம் சட்டசபை தொகுதி யில் 1,558 பேரும், பாபநாசம் சட்டப் பேரவை தொகுதி யில் 1,429 பேரும், திருவையாறு சட்ட சபை தொகுதியில் 1,403 பேரும், வாக்கு ச்சாவடி நிலை அலு வலர்களாக பணி யாற்ற உள்ளனர். . இதே போல் தஞ்சாவூர் சட்டசபை தொகுதியில் 2,624 பேரும், ஒரத்தநாடு சட்டசபை தொகுதி யில் 1,568 பேரும், பட்டுக்கோட்டை சட்டசபை தொகுதி யில் 1,528 பேரும், பேராவூரணி சட்ட சபை தொகுதியில் 964 பேரும் என மொத்தம் 12,430 பேர் வாக்குச்சாவடி நிலை அலுவலர்க ளாக பணியாற்ற உள்ளனர். .இவர்களுக்கு 8 சட்டசபை தொகுதியி லும் முதல் கட்ட பயிற்சி வகுப்பு நடைபெற்றது. தஞ்சாவூர் பாரத் கலை மற்றும் அறிவி யல் கல்லூரியில் தஞ்சாவூர் சட்டசபை தொகுதிகளுக்கான வாக்குச்சாவடிகளில் பணியாற்று உள்ள அலுவலர்களுக்கான முதல் கட்ட பயிற்சி நடந்தது .இந்த பயிற் சி வகுப்பை மாவட்ட தேர்தல் அலுவலரும், கலெக்டர்மான பிரியங்கா பங்கஜம் பார்வையிட்டு ஆய்வு செய்தார். .தேர்தல் நாளன்று வாக்குப்பதிவு மைய ங்களில் கடைபிடிக்க வேண்டிய தேர்தல் நடைமுறைகள் குறித்தும், வாக்குப் பதிவு எந்திரங்கள், கட்டுப்பாடு கருவி, வி.வி. பேட் கருவி ஆகியவற்றின் செயல்பாடுகள் குறித்தும் இந்த பயிற்சி வகுப்பில் விரிவாக எடுத்துரை க்கப்பட்டது . மேலும் இந்திய தேர்தல் ஆணையத்தால் வழங்கப்பட்ட அனைத்து வழிகாட் டு நெறிமுறைகள் குறித்தும் விளக்கப் பட்டது. .இதில் வருவாய் கோட்டாட்சியர் நித்யா, தஞ்சாவூர் மண்டல கூட்டுறவு சங்கங்களில் இணை பதிவாளர் தயாள விநாயகன் அமுல்ராஜ் மற்றும் பலர் கலந்து கொண்டனர்

### ஆரல்வாய்மொழியில்

## மன்னர் பரம்பரை என நினைப்பவர்கள் ஆட்சி வேண்டாம் அதிமுகவுக்கு வாய்ப்பு தாருங்கள்

### முன்னாள் தமிழக முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி பேச்சு



நாகர்கோவில், மார்ச்.30

அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி நேற்று குமரி மாவட்டம் வருகை தந்தார். அவர் ஆரல்வாய்மொழியில் நடந்த பொதுக்கூட்டத்தில் மக்கள் மத்தியில் பேசியதாவது:

குமரி மாவட்டத்தைப் பொறுத்தவரைக்கும் வேளாண்மை, அடுத்தது மீன்பிடித் தொழில், பிறகு ரப்பர் தோட்டம் இந்த மூன்றும்தான் மையமாக வைத்து இந்த மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். விவசாயத் தொழிலுக்கு முன்னுரிமை கொடுக்கின்ற அரசாக அதிமுக அரசு திகழ்ந்து வருகிறது.

அடுத்து மீன்பிடித் தொழில். அது சாதாரண தொழில் அல்ல. அந்த மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருக்கின்றவர்கள் கடலில், ஆழ்கடலில் மீன்பிடித்து வீடு திரும்பினால்தான் அவர் நிச்சயம். அப்படிப்பட்ட ஆபத்தான மீன்பிடித் தொழில் ஈடுபட்டிருக்கின்ற மீனவர் நண்பர்கள், அவர்களுக்கும் பல்வேறு திட்டங்களை அதிமுக ஆட்சியில் நிறைவேற்றிருக்கிறோம். மேலும், பல்வேறு திட்டங்கள் அதிமுக தேர்தல் அறிவிப்பிலே வெளியிடப்பட்டுள்ளது. அதே போல ரப்பர். இந்த பகுதியிலே ரப்பர் தோட்டம் அதிகமாக இருக்கின்றது. அதன் மூலமாக விவசாயப் பெருங்குடி மக்கள் அதைப் பயிரிட்டு இன்றைக்கு அதிலே வாழ்வாதாரம் நடத்திக் கொண்டிருக்கின்றார்கள். அந்தத் தொழிலும் சிறக்க அதிமுக ஆட்சி உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகின்றேன்.

இன்றைய தினம் அதிமுகவின் சார்பாக நம்முடைய கன்னியாகுமரி சட்டமன்றத் தொகுதிக்கு அதிமுக தலைமையிலே அமைக்கப்பட்ட தேசிய ஜனநாயகக் கூட்டணியிலே . தளவாய் சுந்தரம் நிறுத்தப்பட்டிருக்கின்றார். அவருக்கு 'இரட்டை இலை' சின்னத்திலே வாக்களித்து வெற்றி பெறச் செய்யுங்கள் .

தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பாக எங்களுடைய கூட்டணிக் கட்சியைச் சேர்ந்த கிள்ளியூர் சட்டமன்றத் தொகுதியிலே போட்டியிடுகின்ற வேட்பாளர் டாக்டர் ஜே. நிவின் சைமன்க்கு 'தாமரை' சின்னத்திலே வாக்களித்து வெற்றி பெறச் செய்யுங்கள்.

அதேபோல தேசிய ஜனநாயகக் கூட்டணியின் சார்பாக போட்டியிடுகின்ற நாகர்கோவில் சட்டமன்றத் தொகுதி, குளச்சல் சட்டமன்றத் தொகுதி, பத்மநாபபுரம் சட்டமன்றத் தொகுதி, விளவங்கோடு சட்டமன்றத் தொகுதி இந்த நான்கு சட்டமன்றத் தொகுதியில் போட்டியிடுகின்ற அந்த பாஜ கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு 'தாமரை' சின்னத்திலே வாக்களித்து வெற்றி பெறச் செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொள்கின்றேன்.

இந்த மாவட்டம் உயர்கல்வி படித்தவர்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ள மாவட்டம் கன்னியாகுமரி மாவட்டம். அதிமுக அரசு இருந்தபொழுது இரண்டு இடங்களிலே நாங்கள் அரசு கலை கல்லூரியைக் கொடுத்தோம். நாகர்கோவிலில் ஒன்று, பால்குளத்தில் ஒன்று இரண்டு இடத்தில் இன்றைக்கு அரசு கலைக் கல்லூரியைக் கொடுத்து ஏழை எளிய ஒடுக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட கடைக்கோடியில் இருக்கின்ற மாணவ மாணவியர் குறைந்த கட்டணத்திலே உயர்கல்வி படிப்பதற்காக அதிமுக ஆட்சியில் இரண்டு கல்லூரி கொடுத்த அரசாங்கம் அதிமுக அரசாங்கம்

இந்தியாவிலேயே யாரும் கொண்டு வராத அற்புதமான திட்டத்தை ஜெயலலிதா இருக்கின்ற பொழுது அரசுப் பள்ளியில் படிக்கின்ற மாணவர்களுக்கு மடிக்கணினி கொடுத்தோம். ஆனால் திமுக அரசு வந்ததும் நிறுத்தப்பட்டது. இன்றைக்கு மக்களின் செல்வாக்கு இழந்த காரணத்தினால் அவசர அவசரமாகக் கல்லூரியில் படிக்கின்ற மாணவர்களுக்கு முதற்கட்டமாகத் தருவேன் என்று சொல்லி அவசர அவசரமாகக் கொடுத்திருக்கிறார்கள். அந்த லேப்டாப் தரமற்ற லேப்டாப் ஆக இருப்பதாக நான் கேள்விப்பட்டேன். அதிமுக ஆட்சிக்கு வருகின்ற பொழுது விசாரணை கமிஷன் அமைக்கப்பட்டு இதில் ஊழல் நடைபெற்றிருந்தால் சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்தியாவிலேயே அதிகமான தேசிய விருதுகள் பெற்ற ஒரே அரசாங்கம் அதிமுக அரசாங்கம். அதிமுக ஆட்சியில் 10 ஆண்டில் பல துறைகளில் சாதனை படைத்தோம். உள்ளாட்சித் துறையில் மட்டும் 140 தேசிய விருதுகளைப் பெற்றிருக்கிறோம்.

இன்றைய அரசு கலெக்ஷன், கமிஷன், கரப்ஷன் மூன்றும் தெளிவாகச் செய்றாங்க. இந்த ஐந்து ஆண்டு காலம் செய்த சாதனைனா இதுதான் சாதனை. இன்றைக்கு ஸ்டாலின் எப்படியாவது உதயநிதியை முதலமைச்சர் நாற்காலியில் அமர வைக்க வேண்டும் என்பதற்குத்தான் பாடுபட்டுட்டு இருக்கார். இந்த தேர்தல் முடிந்த பிறகு 100 சதவீதம் திமுக வெற்றி பெறுவது இல்லை. அது கனவில் கூட நடக்காது. அப்படி அவர் வெற்றி பெற்று வருவார் என்று நினைச்சா ஸ்டாலின் முதலமைச்சர் இல்லை, உதயநிதி முதலமைச்சர் ஆவதற்குத்தான் திட்டம் போடுறாங்க. ஸ்டாலினே உங்கள் கனவு பலிக்காது, பகல் கனவாத்தான் இருக்கும்.

இது என்ன அரச பரம்பரையா? கருணாநிதி, ஸ்டாலின் பிறகு உதயநிதி. அரச பரம்பரையில் தான் அதுக்குப் பிறகு இளவரசர் வந்துட்டு இருப்பாங்க. அப்படி அரச பரம்பரைக்கு முற்றுப்புள்ளி வைக்கின்ற தேர்தல், நடைபெறுகின்ற சட்டமன்றப் பொதுத் தேர்தல். இனி தமிழகத்தை ஆளக்கூடியவர் இங்கிருக்கின்ற சாதாரண மக்களில் ஒருவராகத்தான் இந்த நாட்டை ஆள வேண்டும். அப்பொழுதுதான் நாட்டு மக்களுடைய எண்ணங்கள் நிறைவேறும். மக்கள் படுகின்ற துன்பங்கள், துயரங்கள், வேதனைகள் அத்தனையும் புரிந்து அதைச் சாதிக்கக்கூடிய ஒருவர்தான் நாட்டுடைய முதலமைச்சராக வேண்டும்.

5 வருஷத்துல 5 லட்சம் கோடி கடன் வாங்கி இருக்காங்க. அஞ்சு வருஷத்துல 5 லட்சம் கோடி. சரி கடன் வாங்குனீங்க என்ன திட்டத்தைக் கொண்டு வந்தீங்க? கொண்டு வந்தாங்களா? எந்த ஒரு புதிய திட்டமும் இல்ல. இன்றைக்குத் தமிழ்நாடு தாழ்ந்து தலை குனிந்து போய் காட்சியளிக்கிறது என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். இந்தக் கடன் பூரா மக்கள் தலையில்தான் வந்து விழும். இப்படி கடன் வாங்குகின்ற அரசாங்கம் தொடர வேண்டுமா? நாட்டு மக்கள் மீது வரி சுமத்துகின்ற அரசாங்கம் தொடர வேண்டுமா? சிந்தியுங்கள். தயவு செய்து சிந்தித்துப் பாருங்கள்.

இன்றைக்குச் சிறுமிகளுக்குப் பாதுகாப்பு இல்லை, பெண்களுக்குப் பாதுகாப்பு இல்லை, பாட்டிமார்களுக்குக் கூடப் பாதுகாப்பு இல்லை. அப்படிப்பட்ட கேவலமான ஆட்சி தொடர வேண்டுமா?

திமுக ஆட்சிக்கு வந்தால் நீட்டுக்கு விதிவிலக்கு பெறப்படும் என்று. இதுவரைக்கும் விதிவிலக்கே பெற முடியல. உதயநிதி ஸ்டாலின் சொன்னாரு, நீட் விதிவிலக்கு பெறுவதற்கு ரகசியம் இருப்பதாகச் சொன்னார். ரகசியத்தைச் சொல்லிட்டாரு முதலமைச்சர் சட்டமன்றத்துல, நீட்டுக்கு விதிவிலக்கு பெற முடியாது. இதைத்தாங்க நாங்களும் சொன்னோம் 2021ல்.

பெற்றோர்களையும் மாணவர்களையும் நம்ப வைத்து வாக்குகளைப் பெற்று ஆட்சிக்கு வந்து அந்தர்ப்பல்ட்டி அடித்தது திமுக அரசாங்கம். இப்போது கேட்டால் உச்சநீதிமன்றத்துல தீர்ப்பு வந்த காரணத்தினால அதை நடைமுறைப்படுத்தாது என்று சட்டமன்றத்தில் தெரிவிக்கிறாங்க. ஆகவே இந்தத் தேர்தலிலே நீங்கள் எங்களுடைய கூட்டணிக் கட்சி வேட்பாளருக்கு வாக்களிக்க வேண்டும். மக்களைக் காப்போம் தமிழகத்தை மீட்போம்! ஸ்டாலின் அரசு பெயிலியர் மாடல் அரசு பைபை ஸ்டாலின் .

இவ்வாறு அவர் பேசினார்.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.